உ

முருகன் துணை



யாழ்ப்பாணத்தைச் சார்ந்த அமரர்கள்
கந்தப்பு சிதேவி தம்பதிகளின் கனிஷ்ட
புத்திரனும் காலஞ்சென்ற திருமதி
ஷண்முகவடிவு அம்மையார்
அவர்களின் அன்புக் கணவரும்
ஓய்வு பெற்ற அதிபரும் சிவசமயத்
தொண்டருமாகிய

## உயர்திரு முருகசூரியன்

## (கவியரசு வெண்பாமணி)


## அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வு : 5 5 1922



உதிர்வு: 17 4 1996

அமரர்

# கவியரசு வெண்பாமணி முருகசூரியன் அவர்கள்

(இளைப்பாறிய அதிபர்)

## திதி வெண்பா

தண்ணளி தாத்ரு வருடம் சற்குண ரேவதியில்
புண்ணிய பூர்வாரம்ப புதன் அமாவாசையில்—புலமைசார்
ஆதவனாம் செம்மல் சூரியன் அன்னார் — எங்கள்
நாதனாம் நல்லை முருகன் தாளிணை சேர்ந்தநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவென்றும் பகலென்றும் பாராது பாடுபட்டு, பாரினில்
எம்மையெல்லாம் பயன் தரும் மரங்களாக்கி
மறைந்து விட்ட எமது பாசமிக்க அன்னையார்
திருமதி. ஷண்முகவடிவு முருகசூரியன்
அவர்களுக்கு

# இம்மலர்

# சமர்ப்பணம்

மலர்வு:
17
1
1924



உதிர்வு:
29
12
1995

அமரர்

# திருமதி. ஷண்முகவடிவு

(இளைப்பாறிய ஆசிரியை)

## திதி வெண்பா

தவ முயர் யுவ வருடம் தந்த மார்கழிப் பூர்வபட்சம்
செகமுயர் கண்ணன் வந்த அஷ்டமித் திதியாம் வெள்ளி
தவத்தினால் பெற்ற அன்னை ஷண்முகவடிவு அம்மை—அந்த
பவமுயர் போற்றும் நல்லைச் சண்முகன் தாளிணை சேர்ந்த
நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கப்பாடல்

சீரோங்கு பதியாம் யாழ்நகரில் செம்மைசார் குடியிற் தோன்றிய கவிவாணா புலவா வெண்பாவுக் கொருமணியே கவியரசுத் தந்தையே எம் வணக்கம் தந்து நின்றோம்.

## மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் புலம்பல்

ஐயா ஐயா என்று அனைவருமே தொழுது போற்ற
ஐயாவாக உலாவந்த அக்காலம் எங்கே ஐயா
காலத்தின் கொடுமையினால் கண்ணெனவே போற்றி வளர்த்த
கண்ணான மக்கள் மூவரை இழந்து வாடி- பின்வந்த
கலியுகப் போரின் நிமித்தம் கண்கலங்கி மனையிழந்து பதியிழந்து
கைப்பிடித்த மனையாள் தனையும் பிரிந்து கதியிழந்து
கடுகியே வந்தீர் கொழும்பு மாநகரம்.

அன்னையும் நீரும் பிரிந்து அங்கங்கே வாழ்ந்தபோதும்
அன்னி யோன்ய வாழ்க்கையினை அடி மனதில் நிரப்பிவைத்தீர்
பாலன்சின்னத்தம்பி பறிபோன குலேந்திரன் பாசமிகு மனைவியென
பல கோடிக் கவலைகளை இதயப் பளிங்கினுள் சேர்த்ததினால்
பாரிசவாத நோய் கண்டு படுக்கையில் வீழ்ந்தீரையா
படுக்கையில் வீழ்ந்த வேளை பாசமனையாளின் வருகைநோக்கி
பரிவுடன் எதிர்பார்த்திருந்த போதில்.—

'ரிவிறச' படையெடுப்பென்னும் நீடிய செய்தி கேட்டு —அன்னை
கடுகியே வந்துசேர்ந்தார் கைதடி முதியோரில்லம்
கூடவே தொடர்ந்து வந்த கூற்றுவன் என்னும் கொடியோன்
கூடவே உள்ளே சென்று அன்னையின் உயிரை
கூட்டியே சென்றான் அந்தோ!

இத்தனை இடர்கள் இந்த நாட்டினில் இருந்த போதும்
அத்தனை இடரும் தாண்டி அன்னையின் மங்கலத்தாலி
தங்கள் கைகளில் சேர்ந்தபோது தாங்கள் கதறிய காட்சி
இன்னும் எம் கண் முன் உள்ளதே ஐயா!

மாதுலன் தன்னை எண்ணா மருகனாம் வீசீஆர்
மறைவிலே வந்து பார்க்கும் தலை மகளுமாம் இராஜியக்கா
பல்கலைக்கழகம் தன்னில் பயின்றிடும் தலைப்
பேரன் கந்தராஜின் கணனிப்
பட்டப் படிப்பு முடிந்து அதனைப்
பார்த்து மகிழ நீங்களும் அன்னையும் இல்லை
ஐயாவின் தேவை கேட்டு அடிக்கடி
வந்து போகும் அன்பான பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்ததரச் செல்வனான சுக்கா வெனும் ராமராஜ்
முன்னைப் பயனோ இல்லை முற்றிய அன்போ
என்னை ஐயா உம்மீது இத்தனை பாசம்
அடிக்கடி உங்களை நாடி வந்து
அங்குமிங்கும் சேதிகளை எடுத்தியம்பி
நோயுற்ற உங்கள் உடம்பிற்கு—நோவு
நெய் பூசிச் செல்லும் பெறாமகன் பிள்ளை— பேரன் ரமேஷ்
பார்ப்பது 'தன் கடமையென' கடமைகள் முடித்து விட்ட
மருமகன் வீவி

ஐயா நான் என்ன செய்ய என அடிக்கடி கேட்கும்—உங்கள்
அடி பற்றித் தொழில் செய்யும் அன்பு மகள் கமலி
ஐயா சுகமா வெனவே ஆவலில் விளிக்கும்
தங்கள் அன்பான பேர்த்திகள் அருணா அனு
அகதிகளாய் நாட்டை விட்டு அக்கரை தேடிச் சென்று
இந்திய மண்ணில் இன்று இசைவுடன் வாழும்
ஆசைப்புத்திரி சந்திரா அவர்தம் மணவாளன் நாகேஸ்வரனும்
கண்ணினால உங்களைக் காணவும் வழியின்றிக் கதறி அழுதிடவே:
வெளிநாடு செல்லும் விசா வந்தது கூறவென விரைந்தோடி
வவுனியா வந்து இறுதி வேளையில் உங்கள் முகம்
பார்த்து நின்ற இனிய மகள் குணபூஷணி.

உங்கள் முயற்சியின் பயனால் கல்வியைப் பெற்றும்— முடிவேல
உங்கள் முகம் காணாது கலங்கும் செல்வப் பேரராம்
அன்புடைக்குகனும் ஆங்கோர் நேசனும்
இன்னிசைச் செல்வி வாசுகியாம் எழில் மைதிலியும்,
கால்பிடித்து கை பிடித்து கலகலப்பூட்டி
பணிபல செய்த பேரர் ஷர்மி தம்பி அகினன் அகீதா—இவர்களோடு
இடையிலே கடமை செய்த மருகி வசந்தியும் குடும்பமும் வாட..

அந்திய காலம் தன்னில் ஐயாவின் பணிகள் செய்து
சிந்திய ஆவி தன்னைத் தன்சிரிய கரத்திற் தாங்கி
தண்ணீர்மை சிறிதும் குன்றா வன்னித் தலைநகர் தன்னில் நின்று
கண்ணீரில் இன்று வாடும் தலை மகன் சூரிய குமாரன்
இத்தனைய பேரும் வாட எங்கய்யா சென்றுவிட்டீர் — வெண்
முத்தனைய உங்கள் முகமலர்ச்சி எங்கே ஐயா?
அத்தனை தூரம் போன எங்கள் அன்னையைத் தேடிப்—பின்னே
சென்றனை எனும் செய்தி தீ போலச் சுட்டதய்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையெனும் தெய்வத்தை இழந்து
ஆங்கோர் மாதம் நான்கு ஆகுமுன்னே
உன்னையும் இழந்து நாங்கள்
உயிர் துடித் தழுகின்றோம் ஐயா
விண்ணை நோக்கி விரைந்து விந்தை
விளங்காது அழுகின்றோம்
கண்ணையிமை காப்பது போலெம்மைக்
காத்த எங்கள் தெய்வமே
உன்னை யெண்ணி உயிர்துடிக்கும்
எமக்கொரு வார்த்தை வந்து சொல்லாயோ.

நாளும் தருமங்கள் இயற்றி — நல்ல
சமயப் பணிகள் செய்து — கூடவே
தமிழும் வளரப் பெரும் பணி புரிந்தீர்
பாக்கள் பாடி பயன் பல தந்து
பாடசாலைகள் தோறும் எழுத்தறிவித்தீர்
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையில் சேவகனாய்ப்
பாரினில் வாழ்ந்தீர் — அந்தோ
பாரியின் பின்னே யோடிப்
பரகதி அடைந்தீர் ஐயா,

காலத்தால் அழியாத உங்கள்
கடமைகளை நாம் மறவோம்
ஞாலத்தில் நீவிர் செய்த
நன்மைகளை நாம் மறவோம்
சீலமிகும் பண்புமிக்கோய் — உம்
சிறப்பதனை நாம் மறவோம் — எம்
பாலமது உடைந்ததென்று
பரிதவித்தே வாடுகின்றோம்.

ஐயாவாக அனைவருக்கும்
அன்பு கொண்டு வாழ்ந்திருந்தீர்
அன்னையிடம் ஓடிச்சென்றே
அங்கிருந்தே வாழுகின்றீர்
அடுத்து வரும் பிறப்புக்களிலும்
அன்னையும் நீருமே எங்கள்
அருந்தவப் பெற்றோராவீர்
அஃதொன்று போதும் எமக்கு
ஆத்மசாந்த அடைவீர் நீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சனேயர் வழிபாடு

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் அளித்துக் காப்பான்

◉ — ◉

## தேவாரம்

## திருச்சிற்றம்பலம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா! நின்றன்
அத்தா உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டாங் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவ புரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோவேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரிவாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோய நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுளறியுமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

இறவாத வின்ப அஃபு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் னடியின் கீழிருக்கவென்றார்,

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தான சற்குண நேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலா யுதப்பெரு மானே!

# திருசிற்றம்பலம்

*——*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org